(8924)
11687
11687



# பழனி ஆண்டவர் பதிகங்களும்,
# பழனிப்பாவையும். (1961)

ஓம் முருகா:

# நான்முகம்.

*நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த*
*கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயும்கும ரேசரிரு*
*தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்*
*தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.*

— *கந்தரலங்காரம்.*

இறைவனது ஆற்றல் அகண்டமானது. காலத்தையும் கணக்கையும் கடந்து நிற்பது. நம்முடைய சிற்றறிவோ ஒரு குறுகிய எல்லைக்குட்பட்டது. இதனைக் கொண்டு எங்கும் பரந்து எதனையுங் கடந்து நிற்கும் அந்தப் பேராற்றலை உள்ளபடியுணர்ந்து கொள்வது நம்மாலியலாது. நமது புலன்களுக்கும் கரணங்களுக்கும் அத்தகைய ஆற்றல் இல்லை.

ஆயினும், எதற்கும் தட்டுப்படாத அந்தப் பேரருட் பெருஞ்சக்தி அன்புக்கு வயப்படுகிறது. அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையாகத்தானே அது கூறப்படுகின்றது. அன்புவழி அதாவது பக்தி மார்க்கம் அனைவருக்கும் பொருந்துவதேயாம். உயர்வு தாழ்வுக்கோ, விதிவிலக்குக்கோ இங்கு இடமில்லை. முற்றுமுணர்ந்த மெய்ஞானியின் முறையீட்டுக்குச் செவி சாய்க்கும் அதே அருட்சக்தி, விவரமே இன்னதென்றறியாத ஒரு பச்சைப் பசுங்குழவியின் அழுகைக் குரலுக்கும் "ஏன்" என்று கேட்டுக்கொண்டு ஓடிவருகின்றது.

காளத்தி வேடனுடைய கலைஞானத்தைப்பற்றி யார் கண்டார்கள்? ஆனால் அவனது அன்பின் ஆழத்தை மலையுச்சியிலே காண்கின்றோம். ஆறே நாளில் முத்திபெற்ற அந்தப் பேரதிசயப் பெரு நிகழ்ச்சியை, கல்லாக் கலைஞனாகிய அந்த ஏழை வேடனுடைய அன்புப் பெருக்கிலே கண்டு பிரமித்து மெய் சிலிர்க்கிறோம்.

"உள்ளொடும் புறம்புமேல்கீழ் உயிர்தொறும் ஒளித்துநின்ற
கள்வனே இவன்தான் வந்திஆள் எனக்காட்டி நின்றார்."

என்ற இந்த அற்புத நாடகத்தை வையைக் கரையிலே நடத்தி வைத்தது எது? அந்த அன்புத்தனே தானே. பிட்டு விற்கும் ஏழைக் கிழவிதான் அவள். ஆனாலும் அவள் அன்புக்குத்தான் எத்தனை ஆற்றல்! பிறப்பின் கீழ்மையையே நெருப்பிலிட்டுப் பொசுக்கித் தூய்மை பெற்ற திருநாளைப் போவாரின் வரலாற்றின் நிலைக்களனும் இந்த அன்புதானே.

அவனருளால் அவன்றாள் வணங்குவதற்கு இந்த அன்பு நெறியே சாலச்சிறந்தது. அன்பு உணர்விலே தோன்றி உயிரிலே கலந்து உரையாகவும் செயலாகவும் வெளிப்படுகின்றது.

"அரும்பொனே மணியே யெனன்பே யென் அன்பி லூறும் ஆனந்த வெள்ளமே" என்று பாடி யாடச் செய்வதும் அன்பே.

"முருகா, முருகா" என்று பரவசமாகக் குதித்துக் களி நடம் புரியச் செய்வதும் அதே அன்புப் பெருக்கே.

"மொழி குழற அழுது தொழுதுருகுமவர் விழியருவி முழுகுவதும் வருகவென அறைகூவியாளுவதும்......மணநாறு சீரடியே" என்று மெய்மறந்து கூறும் அருணகிரிப் பெருமானின் திருவாக்கிலே இந்த அன்பின் பெருக்கையும், வருந்துமுயிரை "வா" வென்று தழுவிக்கொள்ளும் இறைவனது திருவடிச் சிறப்பில் தோன்றும் பேரின்பத்தையும் ஒருங்கே கண்டு திளைத்து நிற்கின்றோம்.

அன்பு முதிர்ந்து செயலாகும்போது களியாட்டமாக மாறிவிடுகின்றது. அதுபோலவே அது உரையாக வெளிப்படும்போது இசைகலந்த பாடலாக வடிவெடுக்கின்றது. இறைவனை வழுத்தும் பொழுது இசைகலந்த பாடல் உள்ளத்தை ஒன்றும்படியாகச் செய்துவிடுகின்றது நன்கு அமைந்த பாடலுக்கு ஒரு தனிச் சக்தியமைந்திருக்கின்றது.

ஒரு நாமம் ஓருருவமில்லாத பெருமானை ஆயிரம் திருநாமங்களாற் கூறி வழுத்தும் பண்சுமந்த பாடல்கள் மக்களை நல்வழிப் படுத்தி இறைவன்பால் செலுத்தும் ஆற்றல் பெற்றவை. "உரையவிழ, உணர்வவிழ, உளமவிழ, உயிரவிழ, உளபடியை" உணருவதற்கும், அனுபூதியடைவதற்கும் உறு துணையாக நிற்பவை அருள்பழுத்த பக்திச் சுவைப் பாடல்களே யாம்.

கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாளைத் தொழு வதே யென்பது திருவள்ளுவர் வாக்கு. அவன் புகழைப் பாடாத நாவும், கேளாத செவியும் படைத்துப் பயன்தா னென்ன? ஆதலினால் அடியார்கள் அவன் புகழைப் பாடி வழுத்துகின்றார்கள். அதில் ஒப்பற்ற இன்பத்தைக் காண் கின்றனர்.

குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவன் முருகன். முக்கட் கரும்பீன்ற முழுமுத்து அவன். கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாகக் காட்சி தருபவன் அப்பெருமான். அவனது மணங்கமழ் தெய்வத் திளநலத்தின் தனிச் சிறப்பைச் சங்கப் பாடல்களும் சாற்று கின்றன. தத்துவஞானிகளும் பேசுகின்றனர். சாதாரணப் புலவர்களும் பாடுகின்றனர். நக்கீரர் போன்ற நாவீறு படைத்த செந்நாப் புலவர்களும், அருணகிரிச் செம்மலைப் போன்ற அருள்வள்ளல்களும் அப்பெருமானைத் துதித்துப் பாடிய தீஞ்சுவைப் பாடல்கள் பலப்பலவாக உள்ளன. அடியார்கள் அவற்றை ஓதியோதி உறுதி பெறுகின்றனர். தெய்வ மணங்கமழும் அந்தத் தேமதுரப் பாடல்கள் என்றுமுள தென்றமிழில் இசை பொலிந்து நின்று நிலைத்து விளங்கு கின்றன.

பழனித் திருவரைமேல் எழுந்தருளியுள்ள பரம் பொருளைப் பாடும் அடியார்கள் என்றுமேயிருக்கின்றனர். தற்காலத்திலும் அவனது திருவடிகளுக்குப் பாமலர்கள்

சார்த்தப் பெறுகின்றன. அவற்றுளொன்றே இந்தப் "பழனி யாண்டவர் பதிகங்களும், பழனிப் பாவையும்" என்ற பனுவலு மாகும். இதில் ஆறு பதிகங்களும், பாவைப் பாடல்களும் அடங்கியுள்ளன. பதிகங்களின் வைப்பு முறையே இதன் சிறப்புக்கு ஒரு சான்று.

"ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்"

என வேண்டுகின்ருர் அருணகிரி வள்ளல். ஆடும் பரியாகிய எழில்மயிலை முற்படப் பாட விழைகின்றது அவரது கனிந்த உள்ளம். அம்முறையில் ஈண்டும் மயில் பதிகமே முற்படத் தோன்றுகின்றது. திருப்பள்ளியெழுச்சி அடுத்து வருகின்றது. அதன்பின் திருவடிச் சிறப்புத் தோன்றுகின்றது. அத் திருவடியைக் காண உயிர் விழைகின்றது. வருக வருகவென வேண்டுகோள் விடப்படுகின்றது. அதன்பின் அந்தத் திருவடிக் கமலத்தில் சரண்புகுகின்றது உயிர். சரணமடைந்த பின்னும் அந்த உயிர் போற்றி செய்துகொண்டேயிருக்கின்றது. இதுவே இந்த நூலில் காணும் ஆறு பதிகங்களின் வைப்பு முறையாகும். பொருத்தமாகவே யுள்ளது.

மேற்கண்ட பதிகங்கள் ஆறும் முதற் பகுதியாகவும், பழனிப் பாவை இரண்டாம் பகுதியாகவும் வகுக்கப் பெற்றிருக் கின்றது.

பழனிப் பாவை பழமையில் முளைத்தலர்ந்ததொரு புதுமலர். முருகச்செம்மலின் திருநாமத்தைப் பாவைப் பாடலில் இசைத்து இன்பங் காண விழையும் மனதிற்கு இது ஒரு வரவேற்பான பகுதியாகும். ஓதுதற்கினியதாய் உள்ளத்திற் பதிவதாயமைந்துள்ளது.

வழிகாட்டிய வள்ளல்களாக மாணிக்கவாசக சுவாமி களையும், ஆண்டாள் பெருமாட்டியையும், அருணகிரிச்செம்மலை யும் மனமுருகிப் போற்றுகின்ருர் ஆசிரியர். அப்பெரியார்களின்

திருவடித் துகளைச் சிரமேற்கொண்டு இந்த நூலை இயற்றிய தாகப் பாயிரத்தில் கூறுகின்றார். இந்த உண்மை பாவைப் பாடல் முப்பதையும் ஆழ்ந்து நோக்குவோர்க்கு இனிது புலனாகும். திருப்பாவை, திருவெம்பாவையின் செழுமணம் பாடல்களில் படிந்துள்ளன. திருவாசகத்தின் உளமுருக்கும் சொற்றொடர்கள் சில அங்கங்கே பொருத்தமுற அமைந்திருக் கின்றன. திருவகுப்பு, திருப்புகழ், அநுபூதி முதலியவற்றின் இழைகளும் அங்கங்கே மின்னுவதைக் காணலாம். அருணகிரி யண்ணலிடம் இவருக்குத் தனி ஈடுபாடு உண்டு என்பதைப் பாவையின் ஆறுவது பாடலில்

"நீரார் விழிகலங்கி நின்ற அருணகிரிப்
பேராளன் கண்களிக்கப் பிறங்கும் மயில்மீதில்
ஈராறு தோள்துலங்க எதிர்நின்ற பெம்மான்"

என்று உருக்கமாக கூறுவதிலிருந்து அறிகிறோம். குமரகுருபர அடிகளின் "கந்தர் கலிவெண்பா" வின் அருள் நோக்கும் இப் பாடல்களுக்குக் கிடைத்திருக்கிறது.

மரபுவழாமல் செல்லும் பாவையில் சில மாறுபாடு களும் செய்யப் பெற்றிருக்கின்றன. அவை பொருத்தமாகவே உள்ளன. மலரெடுத்தல், மலர் தொடுத்தல், அணுக்க நிலை முதலிய தலைப்புக்களோடு கூடிய பாடல்கள் அவை. குறிஞ்சி நிலக் கடவுளைப்பற்றிய பாவையல்லவா, அதற்குத்தக அமைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

எனது நண்பர் திரு. பழ. மாரி செட்டியார் அவர்களின் சீரிய முயற்சி சிறந்தோங்குவதாக. இந்த தெய்வத் திருப் பணிக்கு அவரை ஊக்குவித்தருளிய பழனிமலை மேவி நின்ற பெருமானைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

இங்ஙனம்,
ஸ்கந்த சரண தாஸன்,
பக்தி இரத்ன,
**ந. ச. இராமச்சந்திர ஐயர்,**
ஸ்கந்த நிகேதனம்,
**ஆனைமலை ரோடு,**

ஓம் முருகா.

# பொருளடக்கம்.

## முதற் பகுதி


| பதிகங்கள். | | பக்கம் |
|---|---|---|
| 1. | மயில்பதிகம் | 8 |
| 2. | திருப்பள்ளியெழுச்சி | 10 |
| 3. | திருவடிச்சிறப்பு | 12 |
| 4. | வருகைப்பத்து | 14 |
| 5. | சரணப்பத்து | 16 |
| 6. | போற்றிப்பத்து | 18 |


## இரண்டாம் பகுதி

பழனிப்பாவை.


| | | |
|---|---|---|
| 1. | பாயிரம் | 21 |
| 2. | பழனிப்பாவை | 22 |
| 3. | வாழ்த்து | 32 |

உ
ஓம் முருகா.

## காப்பு.

கந்தக் கமல மலர்த்தாட் கணபதியைச்
சிந்தித்து வந்தித்தேன் செம்பொருளைத்—தந்தைக்கு
முந்தி யுரைத்த முதல்வன் புகழ்பாடும்
செந்தமிழை யோதுதற்குத் தேர்ந்து.

# மயில்பதிகம்.

விண்ணுக் கடங்கா வெறுவெளி யாகும் ஒருபொருளை
எண்ணுக்கு மெட்டா தெவரு மறியா வெழிலொளியைக்
கண்ணுக்கு நேரெதிர் காட்டக் கொணர்ந்தாய் கவின்மயிலே
மண்ணுக்குள் மாந்தர்க்கு நீதரும் மாண்போ மதிப்பரிதே. 1

உம்பர் எழிலியில் ஓங்கிடும் இந்திர வில்லதனில்
அம்புவி சூழ்ந்திடும் ஆர்கலி மீதில் அகல்விசும்பில்
இம்பரில் தோன்றும் எழிலுறு சோலையில் யாவினும்நின்
விம்பம துற்றே விளங்கிடு மன்றோ வியன்மயிலே 2

வானில் மிளிர்ந்திடும் வாள்கதிர்ச் சோதியும் மாமதியும்
மேனிமிர்ந் தோங்கிய மீனொடு கோளும் விளங்குமுன்றன்
நீனிற மேனி நிறைநிரை புள்ளி நிழலெனலால்
நானி யென்னோ நவில்வது நின்றிறம் நன்மயிலே 3

மாகத் திரைமகள் மன்னவ னேறும் வளமயிலே
மேகத் தெழுமுரு மேறது நின்றன் மிடற்றொலியோ
வேகத் துடனதிர் மாருதம் நின்சிறை வீசொலியோ
தேகத் துறுசிலிர்ப் புவரிச் சிமிழ்ப்போ தெரிகிலனே 4

கரந்துறை பாம்பே கருத்தன் மிடற்றில் கறைசெறித்தாய்
பரந்துயிர் தோறும் நிறைந்திடு மண்ணலைப் பாய்ந்தெதிர்த்தாய்
தரந்தெரி யாது தருக்குறு முன்றன் தலைதுமிப்பேன்
நிரந்தர மென்றதை நீகடிந் தார்ப்பாய் நெடுமயிலே 5

நாடிடு மன்பர் நலிவுறும் போழ்தினில் நண்ணலரைச்
சாடிடும் மாண்பினில் சங்கரன் றன்மை தனைப்படைப்பாய்
கூடியே தொண்டர் குழைந்தழ நின்மேல் குகன்றனைக்கொண்
டோடி வரும்போழ் துமையை நிகர்ப்பா யொளிர்மயிலே 6

அன்றொரு தீங்கனி பெற்றிடப் பாரகம் சுற்றிவந்தாய்
குன்றிடைக் கூவிய கீரனைக் காக்கக் குறுகிடுவாய்
நன்றுடை நாவின் நலஞ்சே ரருணைத் திருமுனிவன்
தன்றுயர் தீர்த்திடத் தாவி யடைவாய் தனிமயிலே 7

பொன்னவிர் மேனியன் புண்ணியன் நின்மேல் பொலிவுறும்போ
தன்னவன் சென்னி யணிமுடி கண்டிலை யாயினுஞ்சீர்
துன்னிய சேவடி நின்மிசைத் தோன்றித் துலங்குமதை
என்னிடர் தீர இசைந்துடன் காட்டாய் எழில்மயிலே 8

நல்லவர் போற்றிடும் நாயகன் நின்மேல் நனியமர்ந்து
செல்லுறும் போழ்தில்நற் செவ்வி யறிந்தே சிலவகையாய்
மெல்லெனக் கூறியென் வல்வினை போக்கிடும் வித்தைதனில்
வல்லைநீ யென்பதை மாநில மறியும் வளமயிலே 9

ஓங்கும் புவன மனைத்தும் ஒருங்கே யுறுமிடனாய்த்
தாங்கும் பெருமான் தாமரைத் தாளிணை தான்பொறுத்துப்
பாங்குடன் தாங்கிச் சுமந்திட நீபெற்ற பான்மையினால்
ஈங்குனக் கார்நிகர் என்றே பணிவேன் எழில்மயிலே 10

# திருப்பள்ளியெழுச்சி.

---

விண்ணவர் தேவே விமலைதன் சேயே விளங்குமலர்ப்
பண்ணவன் றன்னைப் பரிவொடு குட்டிப் பரன்றனக்கும்
நண்ணரு முற்பொருள் நாடி யுரைத்திடும் நாயகனே
எண்ணருஞ் சீர்கொள் இறையவ பள்ளி யெழுந்தருளே. 1

இறையவ னேயெம் எழிலவ நீள்வரை யாவினும்சேர்ந்
துறைபவ னேநல் லுளந்தனில் மேவிடு முத்தமனே
மறைபல வேத்தி வழுத்தும் வகையமை மாண்பொருளே
கறைமிடற் றண்ணலின் கண்ணே யெழுந்தருள் காலையிதே. 2

கண்ணே கருத்தே கருது மடியார் கனிந்திசைக்கும்
பண்ணே பயனே பகர்பொருள் யாவும் பரந்துறையும்
விண்ணே விதியே விரையும் மயில்மேல் விளங்கொளியே
உண்ணே ரமுதே யுவந்துடன் பள்ளி யெழுந்தருளே. 3

உண்ணின் றுடற்றும் உறுவினை தீர்க்கும் ஒருபொருளே
கண்ணில் நிறைந்து கருத்தில் வழியும் கனிச்சுவையே
பண்ணிற் பொலிந்து பரவச மாகிப் பழனியெனும்
விண்ணிற் படர்தரும் வேலவ பள்ளி யெழுந்தருளே. 4

குக்குடம் கொக்கரக் கோவெனக் கூவின கொம்பரிடைப்
புக்குறை காகம் புரிந்து கரைந்தது பொய்கையதில்
மிக்குயர் பங்கயம் மெல்ல நெகிழ்ந்து மகிழ்ந்ததுநின்
மக்கள் மனங்கனிந் தோங்கிடச் செங்கண் மலர்ந்தருளே. 5

படரும் ஒளிசேர் பகலவன் றேன்றினன் பண்ணிசைத்தே
யடருந் தருக்களிற் புள்ளின மார்த்தன வம்புவியில்
தொடரு மிருள்போய்த் தொலைந்தது சார்ந்திடுந் தொண்டருளம்
இடரிங் கடையா தெழுந்தருள் பள்ளி யெழுந்தருளே. 6

அடையாத் தினைப்புனத் தார்வமொ டோடும் அயர்ச்சியதோ
படையா ரவுணனைப் பற்றி யழித்த பருவரலோ
இடையார் கிரிதனை யெற்றிப் பிளந்த விளைப்பதுவோ
கடையே மறிந்திலம் கண்டுயில் நீங்கிக் களித்தருளே. 7

கண்ணி னிரட்டும் கடிமுரச சார்க்கும் கதித்துருமி
விண்ணி லிடிக்கும் வியன்பே ரிகையும் விதவிதமாய்ப்
பண்ணிசை போக்கும் பலபல வின்னியம் துன்னியும் நீ
யெண்ணிய தென்னை யெழுந்தருள் பள்ளி யிறையவனே. 8

பள்ளியுள் மேவிப் படுத்திடும் சூழ்ச்சி படைத்தனையோ
எள்ளிநின் றுலும் இனியா ருனைவிடுத் தேகுபவர்
நள்ளிருட் போதிது வன்று விடிந்தது நாயகனே
வள்ளியெம் அன்னை மலரடி வீழ்ந்தே வழுத்துவமே. 9

அடிவீழ்ந் தழுதும் அணுவள வும்முறை கேட்டிலதோ
படிமீ தெமக்குப் பகருந் துணைதா னெதுவுளதோ
கடியே லெமைநீ கருத்தனே காத்துக் கடைக்கணித்தே
மிடியே துடைத்திடும் வேலவ பள்ளி யெழுந்தருளே. 10

## போற்றி.

வேலவ போற்றி விமலனே போற்றி விளங்குமறை
நூலவ போற்றி நுவல்பொருள் போற்றி நுனித்துணரும்
மேலவ போற்றி நல்விண்ணவ போற்றி வியன்பழனி
மேலமர் தேவே விரைவுடன் பள்ளி யெழுந்தருளே.

# திருவடிச் சிறப்பு.

கண்டு களிக்கும் கடம்பன் திருத்தாட் கமலமலர்
பண்டுள யோகியர் பண்ணவர் விண்ணவர் பல்லிடத்தும்
மண்டு தபோதனர் மற்றுள தொண்டர் மனதினிறைந்
தெண்டிசை யேத்தும் இயல்பழ னிக்கிரி யெய்திடுமே 1

கிரிதொறு மாடிடுங் கிண்கிணிப் பாதம் கிளரமரர்
விரிசுடர்ச் சோதி முடிமிசை யார்ந்திடும் வேண்டுமன்பர்
புரிதவத் தோங்கும் பொலன்கழல் மேவிப் புடையொலிக்கும்
எரிசுடர் போற்றும் இயல்பழ னிக்கிரி யெய்திடுமே. 2

போற்றுந் திருத்தாள் புலவர்செந் நாவிற் பொலியுமிசை
சாற்றும் மறைமுடி தன்னிற் சமைந்து தழைத்திடுமால்
கூற்றுங் குலைந்திடச் செய்தடி யார்குறை தீர்த்துமனந்
தேற்றுந் திசைபுகழ் தென்பழ னிக்கிரி சேர்ந்திடுமே. 3

திசைபுகழ் வேலோன் திருவடி யன்று தினைப்புனத்தில்
விசையொடு மேவி விளையாட் டயர்ந்திடும் வேகமயில்
மிசையமர்ந் தண்ட கடாக மனைத்தும் விளங்கவரும்
நசைதவி ரன்பர் நயக்கும் பழனியை நண்ணிடுமே. 4

அன்பர் நயக்கும் அமலன் திருவடி யார்வமொடு
துன்புறு கீரன் துயர்கெடத் தொல்குகைக் கோடிவரும்
மன்பதை கண்டு மகிழ்ந்து வரம்பெறும் மாண்பருளும்
தென்பழ னித்தலஞ் சேர்ந்தொளி வீசித் திகழ்ந்திடுமே. 5

திகழ்ந்திடுஞ் செவ்வேள் திருத்தா ளருணைத் திருமுனிவன்
புகழ்ந்திடும் பாவின் பொருளில் நடனம் புரிந்திடுமால்
அகழ்ந்திடு மன்பர் அருவினை தன்னை யகிலமெலாம்
மகிழ்ந்திடும் மாண்பின் வளஞ்சேர் பழனியை மன்னிடுமே. 6

வளஞ்சேர் முருகன் மலரடி யன்று மதுரமிகுந்
துளஞ்சேர் தீங்கனி யுற்றிட வோடு முதிரவெள்ளக்
களஞ் சேர்ந் தவுணரைக் காய்ந்து சினக்கும் கமலமலர்த்
தளஞ்சேர் கயஞ்சூழ் தனிச்சீர்ப் பழனியைச் சார்ந்திடுமே. 7

கயமுகச் சூரனைக் காய்ந்திடுங் கந்தன் கழலடிதான்
நயமுறு மன்பர் நெஞ்சினில் மேவி நலிவகற்றும்
பயமொழிக் கும்பவ நோய்கெடப் பாயும் பலரையுந்தன்
வயமுறச் சேர்க்கும் வளஞ்சேர் பழனியை மன்னிடுமே. 8

மன்னிய மாண்பின் மயிலோன் திருவடி மாநிலத்தில்
இன்ன லுறுவோ ரெவரெவ ராயினும் எவ்விடத்தும்
துன்னிய நெஞ்சினராகித் துதிக்கில் துயரகற்றும்
இன்னிசை மேவு மெழில்பழ னித்தல மெய்திடுமே. 9

எய்திய சீருடை எந்தை திருத்தா ளிழிகடையேன்
செய்திடுந் தீவினை யாவு மகற்றும் தெளிவுறுத்தும்
உய்திறங் கூட்டிடும் ஒன்று மிலாவென் உரையுவக்கும்
வையக மேத்தும் வளமார் பழனியை மன்னிடுமே. 10

# வருகைப்பத்து.

கந்தா வருக கருணா கரனே வருகவரந்
தந்தாய் வருக தவமே வருக தழல்விழியான்
மைந்தா வருக மயில்மே லொளிர் மணியே வருக்
எந்தாய் வருக இறைவா வருக இனிதுறவே. 1

உறவே வருக உயிரே வருக உளமினிக்கும்
நறவே வருக நலமே வருக நவில்மறைதேர்
அறமே வருக அரசே வருக அருள்கொழிக்கும்
திறமே வருக திருவே வருகசெஞ் சேவலனே. 2

சேவற் கொடிதிகழ் செல்வா வருக திருவடிவேல்
மேவுற் றொளிர்செங் கரனே வருக விரிமலர்ப்பூங்
காவிற் பொலிதென் பழனிச் சுடரே வருகவுழல்
பாவிக் கருளும் பதியே வருக பராபரனே 3

முருகா வருக முதல்வா வருக முகுந்தன்மகிழ்
மருகா வருக மலைமகள் சேயே வருக வொளிர்
மருவார் கடப்ப மலரோய் வருக மதியருளும்
குருவா கியநற் கோனே யடியேன் குறையறவே. 4

நாதா வருகமெய் ஞானப் பொருளே வருகமலர்ப்
பாதா வருக பனிமதி சூடும் பரமன்மகிழ்
போதா வருக புனிதா வருக பொதியவிழும்
தாதார் கமலத் தடஞ்சூழ் பழனியிற் சண்முகனே. 5

ஆறு முகத்தெம் அரசே வருக அரன்நுதற்கண்
வீறு பெறவந் துதித்தோய் வருக மிகவினிதாய்க்
கூறு மறைச்செம் பொருளே வருக குலமடங்க
மாறு படுஞ்சூர்த் தடிந்தோய் விரைந்துடன் வந்தருளே. 6

பொன்னே வருக புனிதா வருக பிழைபொறுக்கும்
அன்னே வருக அமுதே வருக அழகொழுகும்
மின்னே ரயில்வேல் விமலா வருக வினையகற்றும்
மன்னே வருக வளமார் பழனியில் வாழ்பனே. 7

கானக் குறமின் கணவா வருகநற் கற்பகமார்
வானப் பதிமகள் நாயக வருக வழிதெரிக்கும்
மோனப் பொருளே வருகவென் முன்னே மிகவிரைந்து
ஞானச் சுடரே வருவா யடியேன் நலமுறவே. 8

திருப்பரங் குன்றந் திருவா வினன்குடி செந்தில்நகர்
விருப்பமொ டுற்றிடும் விண்ணவ வாராய் விளங்குகின்ற
பொருப்புகள் யாவினும் பூவார் பழமுதிர் சோலையினும்
இருப்பெனக் கொண்டெழி லேரகம் மேவும் இறையவனே. 9

கண்ணே வருக கருத்தே வருக கனிந்திசைக்கும்
பண்ணே வருக பயனே வருக பழனியெனும்
விண்ணார் தடவரை மேவிடு மெந்தாய் வருக வென்றன்
உண்ணே ரமுதே வருவாய் வருவாய் உடையவனே. 10

# சரணப்பத்து.

விஞ்சைப் பொருளே சரணம் சரணம் விழையுமவர்
நெஞ்சக் கமலத் துறைவோய் சரணம் நிகர்கடந்த
செஞ்சொற் சுவையே சரணம் சரணம் திகைத்தவுணர்
அஞ்சச் சமரில் அடுவேல் விடுவோய் சரணுனக்கே. 1

அத்தா சரணம் அருளார் கடலே யனைத்துயிர்க்கும்
வித்தாய் விளங்கும் விகிர்தா சரணம் விமலைமகிழ்
முத்தே சரணம் முருகா சரணம் முழுதுணரும்
சித்தாய்ப் படர்ந்த சிவமே சரணம் சரணுனக்கே. 2

விண்ணு ரொளியே சரணம் சரணம் விரிந்துபடர்
கண்ணுர் கவினே சரணம் சரணம் கதியளிக்கும்
பண்ணுர் பழனிப் பதியே சரணம் பழிமலையும்
நண்ணு ரடல்பொடி யாக்கிடும் எந்தாய் சரணுனக்கே. 3

மலைமே லமரும் மணியே சரணம் மதிப்பரிய
கலையே சரணம் கணக்கொடு காலம் கடந்துநின்ற
நிலையே சரணம் நிமலா சரணமென் நெஞ்சிலொளிர்
தலைவா சரணம் தமியேற் கருள்வாய் சரணுனக்கே. 4

எரிவான் வளிநீர் இருநில மாஞய் சரணமெலாம்
விரிவா யொடுங்கும் விந்தையு மாவாய் சரணம்மிக
அரிதா யெளிதா யகிலமு மாஞய் சரணமெனக்
குரியாய் சரணம் உயர்சே வலனே சரணுனக்கே. 5

சிகரக் கிரியைப் பிளந்தாய் சரணம் திரைகறங்கும்
மகரப் புனலதில் மாதடிந் தாய்மலர்த் தாள்சரணம்
நிகரற் றொளிர்நெடு வேலவ நின்தாள் சரணமொரு
புகலற் றுழல்வேன் பிழையே பொறுப்பாய் சரணுனக்கே. 6

பதியே சரணம் பரனே சரணம் பயன்தருமெய்
நிதியே சரணம் நிறைநிலை யாகியென் நெஞ்சில்வளர்
மதியே சரணம் வளமார் பழனியில் மன்னிவளர்
கதியே சரணமென் கண்ணே சரணம் சரணுனக்கே. 7

தும்பி முகத்தோன் துணைவா சரணம் சுரருலகும்
அம்புவி யுந்தொழும் ஐயா சரணம் அடல்மிகுந்த
வம்பரைக் காய்ந்த வடிவேற் கரனே சரணமருள்
எம்பெரு மானே சரணம் எளியேன் சரணுனக்கே. 8

அருளா ரமுதே சரணம் அடியேன் அகத்திலுறை
இருளே துணித்தோய் சரணம் இருவினை நோய்கெடுக்கும்
குருவே சரணம் குமரா சரணம் குரவொடுதேன்
மருவார் கடம்பொளிர் மார்பா சரணம் சரணுனக்கே. 9

தாயா யருளும் தயையே சரணம் தலம்புரப்பாள்
சேயே சரணம் தினையார் புனத்துறை செல்வி மகிழ்
நேயா சரணம் நெடியோய் சரணம் நிமிர்ந்துவளர்
வேயார் குறிஞ்சி மிசையம ரந்தாய் சரணுனக்கே. 10

# போற்றிப்பத்து.

எங்கும் நிறைந்த இறையவ போற்றி யெழில்ததும்பிப்
பொங்கும் மயில்மேல் பொலிசுடர் போற்றி புகலிடமாய்க்
கங்குல் பகலற நின்றவ போற்றி கருணை யெலாந்
தங்குந் தலைமைத் தனிப்பொருள் போற்றிநின் தாளிணையே. 1

வானாய் மலையாய் வளர்ந்தனை போற்றி மறிகடலும்
ஆனா யளப்பரும் அண்டமு மாகினை போற்றியெலாந்
தானாய் நிலைத்தொளிர் சண்முக நின்னடி போற்றிநறுந்
தேனார் கடம்பணி தெய்வமே போற்றிநின் சேவடியே. 2

மன்னிய கோள்களு மாகினை போற்றி வகை வகையாய்
மின்விரி மீனென மேவினை போற்றி வெகுண்டு வரும்
முன்வினை போக்கிடும் மூர்த்தியே போற்றி முழுமுதலே
பன்னிரு திண்புயப் பண்ணவ போற்றி பராபரனே. 3

அண்ணலே போற்றி யழகனே போற்றி யளவிலொளி
வண்ணனே போற்றி வழித்துணை போற்றி வயங்கிடுமென்
எண்ணமே போற்றி யெனதுயிர் போற்றி யெழில்பழனி
நண்ணிடு மெந்தைநின் நல்லடி போற்றியென் நாயகனே. 4

உத்தம போற்றி யுயர்பொருள் போற்றி யுரைகடந்த
வித்தக போற்றி விமலனே போற்றி மிகுங்கருணைச்
சித்தனே போற்றியென் செல்வமே போற்றி திருப்பழனி
யத்தனே போற்றி யடிமலர் போற்றினேன் ஆண்டருளே. 5

வையம னைத்தும் புரந்தாள் மதலையே போற்றியென்றன்
ஐயனே போற்றி யணிகிளர் மார்பனே போற்றியருள்
மெய்யனே போற்றிநல் வேலவ போற்றி வினைகடந்த
துய்யனே போற்றி சுடரொளி போற்றி துரந்தரனே. 6

அணைக்கும் மலரடி போற்றி யடியார் குழுவிலெனை
இணைக்கும் கருணை யெழில்நலம் போற்றி இடம்பொழுதாம்
கணக்கின் நிலையைக் கடந்தவ போற்றி கருத்திலன்பு
மணக்கும் பழனியின் வள்ளலே போற்றி வரமருளே. 7

குன்றிடைக் கீரனைக் காத்தனை போற்றிமுன் கூடலிடை
மன்றினில் தீந்தமி ழீந்தனை போற்றி வளமலைமேல்
நின்றடி யார்குறை நேர்ந்தனை போற்றி நிருதரிடை
அன்றொரு வேல்விடு மண்ணலே போற்றியென் ஆரமுதே. 8

வெள்ளக் கருணை விரிகடல் போற்றி விளங்குமறை
விள்ளுஞ் சிறப்பின் வியன்பொருள் போற்றி மிகுதவத்தோர்
உள்ளக் கமலத் துறைபொருள் போற்றி உருகியன்பர்
அள்ளிப் பருகும் அமுதமே போற்றி யருள்குகனே 9

போற்றிநின் பொன்னடி போற்றிநின் மார்பிற் பொலிகடம்பும்
போற்றிநின் வேற்படை போற்றிநின் மாமயி லுங்கொடியும்
போற்றியென் அன்னையர் போற்றி மெய்யன்பர் புரிதவமும்
போற்றியெந் நாளும் புவனமும் யாவும் பொலிந்திடவே 10

## வாழ்த்து.

வாழிய வெந்தை மலர்க்கழல் வாழ்க வளமயிலும்
வாழிய குக்குட மார்கொடி வேலும் மலர்க்கடம்பும்
வாழிய வன்னையர் வாழ்கநல் லன்பர் மகிதலமும்
வாழிய வானம் வளஞ்சேர் பழனியும் வாழியவே.

ஓம் முருகா.

# பாயிரம்.

## அவையடக்கம்.

பேணும் பழனிப் பெருமான் திருவருட் பொன்னடிக்குப்
பூணும் வகையமை பொற்புடைப் பாவை புனைந்திடுதல்
நாணுஞ் செயலெனக் காயினும் நன்குணர் நல்லடியார்
காணின் பொறுப்பரென் றென்சிறு நெஞ்சங்கருதியதே.

ஆதலினற்சிறி தாறுதல் கொண்டென் னகந்துணிந்து
பேதைமை தோன்றப் பிதற்றிய தேனும் பிறங்குமயில்
மீதம ரெந்தை திருப்பெயர் மேவி விளங்குதலால்
தீதறு மென்றெரு வாறு தெளிந்ததென் சிற்றறிவே.

## வழிகாட்டிய வள்ளல்கள்.

ஆசறு தீந்தமிழ்ப் பாவை யருளும் அமுதமணி
வாசகச் செம்மல் மலர்ப்பதம் வாழ்த்திநன் மாதவன்பால்
நேசமுறத் திருப்பாவை மொழிந்தாள் நிறைமலர்த்தாள்
பூசனை செய்தருட் பாவையு மிங்ஙன் புகன்றதுவே.

## பற்றுக்கோடு.

எண்ணருஞ் சீருடை யெம்மான் திருவருளில் திளைத்தே
பண்ணொளி விஞ்சுந் திருப்புகழ்ச் செஞ்சொற் பாவைதந்தான
அண்ணல் அருணைத் திருவரு ளாளன் அவனடியைக்
கண்ணினி லொற்றிச் சிரத்தினிற் பற்றிக் கழறியதே.

## மலர்ச்சி.

நீடிய சார்வரி கார்த்திகைத் திங்கள் நிறைமதிநாள்
பீடுயர் குன்றமர் பெம்மான் திருவடிப் போதுபற்றிப்
பாடிய பாவை நிறைந்து மலர்ந்தது பல்வளனும்
நாடும் பழனித் திருவரை மீதில் நலனுறவே.

# பழனிப்பாவை.

## காப்பு.

வையஞ் சிறந்தோங்க வான்பழனி மாமலைமேல்
ஐயன் புகழ்பாடி யாம்போற்ற—செய்யவொளிக்
காராரும் மேனிக் கணபதியின் பொற்கழலைச்
சீராக நெஞ்சேநீ செப்பு.

## நூல்.

ஓங்கு முலகனைத்தும் ஓம்பும் பரம்பொருளைப்
பாங்குடன் நாம்போற்றிப் பண்ணிசைத்துப் பாடுதற்கு
ஈங்கின்று மார்கழிநாள் எய்தியதால் ஏந்திழைமீர்
நீங்குமின் நித்திரையின் நெஞ்சங் கனிந்தன்பு
தேங்குந் திடமனத்தாற் செய்வோம் திருப்பணிகள்
ஏங்கு முயிர்க்குலத்தை எற்றும் பழவினைகள்
தூங்கி யழிந்தோடச் சுடர்வேல் துரந்தோன்றன்
பூங்கழல் போற்றுதும் நாம் புகழ்ந்தே லோரெம்பாவாய். 1

ஞாலத் துறைவீர்காள் நாமின்னே மார்கழிநாள்
காலைச் சிறுபோதில் கதிரோ னணைவதன்முன்
மேலுற்ற நந்துயிலை மாற்றி விரைந்தெழுந்து
நீலத் திருமயிலை நெடுவேலைச் சேவலினைக்
கோலக் குமரோன்றன் குரைகழலைச் சிந்தித்தே
சேலுற்ற தண்சுனை நீ ராடித் திருநாளாய்ச்
சீலத்துடன் பாவைத் திருநோன்பை யாற்றுவமேல்
மேலைத் தவமோங்கும் விரைந்தே லோரெம்பாவாய். 2

சீரார் பரங்குன்றில் செந்தூர்ப் பழம்பதியுள்
தீராப் பிணிபோக்கும் திருவாவி னன்குடியில்
ஏராரு மேரகத்தில் இனிதா யமர்ந்தோனைக்
காரார்ந்த குன்றுதோ ருடல்கனிந் தருளிப்
பாரோர் உளங்கவரும் பழமுதிர்ச் சோலையில்மேவி
நேராய் நிலைத்த நின்மலனை நேயமிலாச்
சூராதியர்ச் செற்ற சுந்தரனை வாழ்த்தியவன்
பேராற்ற லேபுகழ்ந்து பேசே லோரெம்பாவாய். 3

சிற்றம் பலமேய செல்வன் சிவபுரத்தன்
செற்றார் புரமூன்றும் சிரித்துப் பொடிபடுத்தோன்
கற்றைச் சடைமுடிமேல் கங்கைப் புனல்தவழ
முற்றாத வெண்டிங்கள் முடித்தோன் திருவுளந்தான்
பற்றப் பழமறையின் பயன்விரித்த பாவலனைக்
கொற்றக் குலமயில்மேல் கோலமுறப் பூவுலகைச்
சுற்றிப் பழம்வினவும் தூயோனடிபோற்றின்
உற்றே பறைதருவான் உவந்தே லோரெம்பாவாய். 4

போக்கும் வரவுமிலாப் புண்ணியனைப் பொன்னொளியை
வாக்கு மனங்கடந்த மாமணியை மன்னுயிரில்
நீக்க மறநின்ற நின்மலனை நேர்வார்தம்
ஏக்கந் தவிர்த்தாண்ட எம்மான் முருகோனை
தூக்கும் மறைமுடியிற் றோன்றும் தனிச்சுடரை
காக்கும் பழனிகிரிக் காட்சிப் பொருளோனை
ஊக்கமுடன் போற்றி உவந்தேநாம் ஆட்செய்யின்
ஆக்கஞ்செழித் தோங்கும் அமைந்தே லோரெம்பாவாய். 5

பாரார் வினைச்சுழலிற் பட்டு நிலைதவறி
ஓரா தொழியாமல் உள்ளந் தடுமாறி
தேராச் சிறுநெறியிற் சிக்குண் டவலமுற்றுப்
பாராமல் நாளெல்லாம் பழிமலைந்த தென்றழுது
நீரார் விழிகலங்கி நின்ற வருணகிரிப்
பேராளன் கண்களிக்கப் பிறங்கும் மயில்மீதில்
ஈராறு தோள்துலங்க எதிர்நின்ற பெம்மான்றன்
சீரார் கழல்துணையாம் சிறந்தேலோ ரெம்பாவாய். 6

ஏதந் தவிர்த் தாண்ட எம்மான் முருகோன்றன்
பாதந்தனை யடியோம் மனத்திற் பதித்தாழ்ந்த
காதல் கசிந்தூறக் காலை புலவர்தன்முன்
சீதப் புனலாடித் தேனூர் பசுஞ்சோலைத்
தாதுற் றளிமுரலாத் தண்ணென் மலர்பறித்து
கோதற்ற வான்பழனிக் கோலத் திருமுடியின்
மீதுற் றமர்ந்தபிரான் விரைகழலிற் சார்த்தியிடின்
போத நெறிதுலங்கும் புரிந்தே லோரெம்பாவாய். 7

## மழைவரம் வேண்டல்.

விண்ணில் விரைந்தோடும் வியன்முகிலே வேண்டுதல்கேள்
தண்ணந் தடங்கடலுள் தடையின்றிப் போய்மொண்டு
கண்ணார் எழில்மயில்போல் கவின்காட்டி வான்பரவி
ஒண்ணார் உரஞ்சிதறும் ஒளிர்வேல்போல் மின்னியவன்
பண்ணார் கொடிமேவிப் பாய்ந்தொலிக்கும் குக்குடம்போல்
எண்ணு திடித்தெந்தை யின்னருளே போல்பெய்வாய்
மண்ணோர் வளம்பல்க மார்கழி நீராடி
உண்ணேரப் போற்றிடுமா றுவந்தேலோ ரெம்பாவாய். 8

## ஆயந்திரட்டல்.

கோழிக் கொடிபடைத்த கோமானைப் பன்னிரண்டு
பாழித் தடம்புயத்துப் பண்ணவனை விண்ணமுதை
ஊழி முதல்வன் உவந்தளித்த கண்மணியை
ஆழித் திரைநடுவில் அடல்மா தடிந்தானை
சூழுந் துயர்துடைத்துந் தொல்லுலகி லெவ்வுயிரும்
வாழும் வகையளிக்கும் வானவனை வாயார
வாழியென வாழ்த்தி யவன்புகழை நாம்பாட
தோழீ மணிக்கதவம் திறவேலோ ரெம்பாவாய். 9

வெள்ளி முளைத்து விளங்கியதால் மென்சேக்கைப்
புள்ளும் பரந்தொலிக்கப் பொழுதும் சிறுவெளுப்பாய்
மெள்ளக் குணதிசையின் மேவிப் புலர்ந்தும்நீ
உள்ளம் மறைத்தனையோ ஓங்கும் பெருத்துயிலாய்ப்
பள்ளிச் சிறைதன்னில் பட்டாயோ பான்மொழியாய்
கள்ளந் தவிர்ந்தின்னே கடுகி யெழுந்திடுவாய்
வள்ளிக் கொடிபடர்ந்த மாணிக்க மாமலையை
உள்ளித் துதிபாட உவந்தேலோ ரெம்பாவாய். 10

மின்னற் கொடியுரையும் மெல்லிடையாய் மெத்தவும்நீ
பன்னிப் பழனிகிரிப் பண்ணவன்சீர்ப் பாதமலால்
உன்னித் துதியேன்மற் றொருவரையும் வேண்டுகிலேன்
என்னப் பலபேசி இன்னுரைகள் கூறினையால்
நென்னற் புகன்றிடுஞ்சொல் நீதான் மறந்தனையோ
கன்னற் சுவைமொழியே கதவந் திறந்திடுவாய்
முன்னைச் சரவணத்தில் தோன்றும் முதற்பொருளாம்
மன்னைப் பரவுதற்கே மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 11

செந்தே னெடுத்துத் தேடிக் கிழங்ககழும்
கொந்தார் குறிஞ்சிக் குறவர்பூங் கொடிக்காகச்
சந்தார் வரைதனிலே தனிச்சென்ற பெம்மானை
செந்தூர்ப் பதிமேய செல்வா திகழ்பழனி
யெந்தாய் எனவாழ்த்தி யெழிலார் பறைகொள்வான்
வந்தே மிதுகாலை வாளா துறங்குவையோ
சிந்தூர வாணுதலா யிதுவோ திகழ்முருகன்
பைந்தார்ப் பதம்பணியும் பரிசேலோ ரெம்பாவாய். 12

கோலப் பசுங்கிளியே கோகிலமே யாம்போந்து
சாலப் பரிந்தழைத்துச் சாற்றினதுங் கேட்டிலையோ
மாலுற் றுறங்கினையோ மற்றுன் செவிசெவிடோ
நீலத் திருவிழியாய் நெஞ்சங் கருங்கல்லோ
மேலுற்ற தென்னேகொல் மெய்தான் விளம்பாயோ
வாலைச் சிறுமிமா ரெல்லோரும் வந்துற்றார்
காலங் கடுகியது கண்டாய் பரிந்தெழுவாய்
வேலின் றிறம்பாட விரைந்தேலோ ரெம்பாவாய். 13

வாளார் தடநெடுங்கண் வல்லீ கடம்பொளிரும்
தோளான் புகழ்பாடும் சொல்லமுதங் கேட்டேயும்
வாளா கிடத்தியால் வாயும் மலர்ந்திலையால்
கேளாச் செவியுனக்குக் கிட்டியது மென்னேகாண்
மீளாத் துயர்விளைத்து விண்ணரசுக் கின்னல்தரும்
கோளார் குலம்குலைத்த கூர்வேற் குமரனுக்கே
ஆளாவோம் கேளாவோம் அவன்புகழே பாடியவன்
தாளாற்றல் சாற்றுதும்நாம் சார்ந்தேலோ ரெம்பாவாய். 14

பண்ணார் பனிமொழியாய் பள்ளிக் கிடத்தியோ
ஒண்ணாத கண்ணுறக்கம் ஒன்றே யறிவாய்கொல்
நண்ணாதன புகலும் நங்கைமீர் நீவிருந்தாம்
எண்ணா துரைக்கின்றீர் எல்லோரும் போந்தாரோ
பெண்ணே பிறைநுதலாய் பேசாதிவண் போந்துன்
கண்ணால்நின் தோழியரைக் கண்டே கணக்கிடுவாய்
புண்ணாகு மாறு புகலாதீர் யான்போந்தேன்
விண்ணா டனைப்போற்ற விரைந்தேலோ ரெம்பாவாய். 15

அன்னா யிதுகேள்நின் அருமைத் திருமகள்தான்
என்னே துயில்வாய்ப்பட் டெல்லாம் மறந்தனளோ
மின்னேர் விளங்கிழையீர் விரைந்தெழுந்து யானுமக்கு
முன்னே புகுதருகேன் என்று மொழிபுகன்று
சொன்னா ளதுமறந்தாள் தோகை யவளையும்நீ
இன்னே துயிலுணர்த்தாய் யாம்போந் தெழில்வேலோன்
பொன்னார் திருவடியைப் போற்றுதுமால் மார்கழியாம்
நன்னா ளிதுகாணாய் நயந்தேலோ ரெம்பாவாய். 16

சங்கு முரன்றொலிக்கத் தாமரையும் கண்விழிப்பக்
கங்குல் முகம் வெளிறிக் கருத்தழிந்து கண்கலங்கிப்
பொங்கி யுகுத்திட்ட புல்லியகண் ணீரேபோன்
றெங்கும் பனிசிதறு மிதுபோது யாங்குழுமி
எங்கோன் திருப்புகழை யினிதிசைத்துங் கேளாத
நங்கா யிதுநன்றோ நாணன்றோ நீயுறங்கல்
கொங்கார் கடம்பொளிரும் கொற்றப் புயம்பாட
துங்க முறவெழுந்து தோன்றேலோ ரெம்பாவாய். 17

### சுனையாடல்.

கள்ளொத்த வின்சொற் காரிகையீர் பொற்பளிங்கு
வள்ளத் தொளிர்கின்ற வார்புனல்போல் நேர்விளங்கும்
வெள்ளச் சுனைகாணீர் மேவிப் படிந்திடுவோர்
உள்ளக் கறைபோக்கி யுயிர்க்குறுதி தான்பயந்து
கள்ளக் கருமமலக் கட்டறுத்து விட்டகலா
தெள்ளும் பவத்தொடரை யெற்றிடுமா லீங்கிதனில்
உள்ளங் குளிர்ப்பூற நீராடின் ஒண்பழனி
வள்ளல் பதம்மருவும் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 18

அஞ்சொற் பவழவிதழ் ஆயிழைமீர் இன்னேநாம்
கஞ்சச் செழுமலரிற் களிதூங்கிக் கண்ணயர்ந்து
துஞ்சும் மடவன்னம் துணுக்குற் றிரிந்தோட
விஞ்சும் சுனைப்புனலில் வீழ்ந்து விளையாடி
மஞ்சிற் பொலிகுழலின் மணங்கமழ நீராடி
பஞ்சுற்ற மெல்லடிகள் பனிப்பக் கரையேறி
நெஞ்சங் கனிந்தூற நீறணிந்து வேல்முருகன்
விஞ்சைப் பதம்பெறுவோம் விரைந்தேலோ ரெம்பாவாய். 19

### மலரெடுத்தல்.

முத்தின் நிரைபுரையும் மூரல்பொலி முகத்தீர்
சித்தங் களிகூரச் சுனைகுடைந்தோ மீங்கினிநாம்
கொத்தார் சினைபொதுளும் குளிர்சோலை யுட்புகுதும்
புத்தம் புதுமலரைப் பொறிவண்டு முன்சென்று
மொய்த்துச் சிறுசிறகால் மோதிக்குழல்வாயை
வைத்துச் சுவைகலக்கி மாசுபடச் செய்வதன்முன்
மெத்த விரைந்தெடுத்து வேலோன் கழலிணையில்
உய்த்துச் சொரிந்திடுவோம் உவந்தேலோ ரெம்பாவாய் 20

## மலர்தொடுத்தல்.

கண்டின் சுவைமொழியீர் காவின் மலரெடுத்துச்
செண்டு தொடுப்போம் சிறுமாலை செய்தமைப்போம்
கண்டார் பவமொழிக்கும் கழலிணையிற் பெய்வதற்கே
தண்டா மரைமலரைத் தனியெடுத்துப் போற்றிடுவோம்
தண்டா யுதம்பொலியும் தனிக்கரத்திற் கோராரம்
திண்டோளுக் கோரலங்கல் திகழ்மார்பிற் காரமெனக்
கொண்டு தொடுப்போம் குலவரையின் மேற்குகனைக்
கண்டு பணிந்தணிவோம் கனிந்தேலோ ரெம்பாவாய். 21

## அஃணுக்கநிலை.

என்றுந் தனையுற்றார்க் கேமநிலை யளிக்கும்
குன்றி னடிசூழ்ந்து கோயில் வலம்வந்தோம்
நின்று நிமிர்ந்தோங்கும் நெடுங்கோ புரங்கண்டோம்
வென்றிக் குரல்முழக்கும் விறற்கொடியும் நாம்கண்டு
மன்றிற் புடைசூழ்ந்து வாழ்த்தி மகிழ்ந்தனமால்
துன்றும் எழிலஃபொலியுந் தோகைத் திருமயிலை
முன்றிற் றலைகண்டோம் முதல்வன் திருவடியும்
நன்றேநாம் கண்டுவப்போம் நயந்தேலோ ரெம்பாவாய். 22

## திருப்பள்ளியெழுச்சி.

வானத் தமரருக்கும் வாழ்வளிக்கும் பெம்மானே
மோனப் பெருந்துயிலின் முறைதானும் என்னேயோ
கானக் குறமயிலின் காட்சித் திளைப்பதனில்
ஏனைப் பொருளடங்க வெல்லாம் மறந்துளதோ
தேனில் தினைமாவில் சிந்தை மயங்கியதோ
ஏனிந்த மாமாயம் ஈதுன் விளையாட்டோ
மேனின்ற மெய்நிலையே விழிமலர்ந்து நீயெழுந்து
ஞானப் பதமருள்வாய் நவின்றேலோ ரெம்பாவாய். 23

அன்னை யபிராமி ஆரணிவெண் ணீறணிந்த
மன்னைப் பிரியாத மாதுமையாள் ஏதமிலாள்
தன்னை நினைக்குமவர் தம்முன் விரைந்தோடி
இன்னல் களைந்துயிருக் கின்பந் தரும்முதல்வி
அன்னம் அளித்துலகை யாதரிக்குந் தாய்மகிழும்
வன்னச் சிறுமதலாய் வந்தே மடியேமும்
முன்னம் எமக்குரைத்த மொழிமறந்து நீயுறங்கேல்
இன்னே யெழுந்தருள்வாய் இசைந்தேலோ ரெம்பாவாய். 24

வெட்ட வெளியாகி வீறுடைய மாருதமாய்ச்
சுட்டும் எரிபுனல்பார் தோற்றமெலாந் தானேயாய்
வட்ட. மதியாகி வயங்குகதிர் மண்டிலமாய்க்
கட்டும் வினைப்பிணிப்பிற் கலங்கு முயிராகி
விட்டும் விடாதொளிரும் மெய்ப்பொருளே யாம்விளித்தும்
எட்டுணையுங் கேளாய்போல் இனிதுறங்க லெம்முறையோ
மட்டுவிரி செச்சை மலர்மார்பா வாய்மலர்ந்து
திட்டமுட னெம்மைத் தேற்றேலோ ரெம்பாவாய். 25

விண்ணப்பம்.

பச்சைப் புயல்வண்ணன் பாற்கடலின் மேற்றுயில்வோன்
மெச்சுந் திருமருகா வேழ முகத்தோன்றன்
இச்சைக் குகந்த இளையோனே யேடவிழ்தார்ச்
செச்சைத் திருமார்பா சிறியேம் அறியாதேம்
கொச்சைச் சிறுமொழியாற் கூறுவன வன்றியொரு
விச்சைப் பதமறியோம் வேத நெறியுணரோம்
எச்சார்பு மில்லோமை யெள்ளாதே தள்ளாதே
அச்சந் தவிர்த்தின்னே யருளேலோ ரெம்பாவாய். 26

## சூளுரை.

கூற்றங் குமைத்தபிரான் கொன்றைச் சடைமுடியான்
ஆற்றற் றிருமகனே அருள்பொழியும் பேராளா
சாற்றும் முறைகேளாய்ச் சார்ந்தோம் நினையன்றிப்
போற்றும் பொருளெமக்குப் பொருந்துமா றொன்றில்லை
ஏற்ற முறநின்றன் எழிலன்பர்க் காளாவோம்
வேற்று நிலையாரை வேண்டேஞ் சிறிதேயும்
மாற்றந் திருப்புகழே யன்றியாம் வாய்திறவோம்
ஆற்றப் பறையெமக்கே யருளேலோ ரெம்பாவாய். 27

## ஏமப்பெருநிலை.

மின்றங்கும் மாமுகில்கள் மேவிப் புடைசூழும்
குன்றங்கள் தோறும் கோலமுற நின்றோங்கும்
வென்றிச் சுடர்நெடுவேல் விமலா நினைப்பாடி
இன்றெம் மிடர்களைவான் ஈண்டுற்றேம் ஏழையரேம்
நன்றுன் திருக்கழலின் நலங்காட்டி யாம்வேண்டும்
துன்றும் பறைதந்து சூழ்வினையை மாற்றிநினை
என்றும் மறவாத ஏமப் பெருநிலைதான்
ஒன்றும் வகையருள்வா யுவந்தேலோ ரெம்பாவாய். 28

## போற்றி.

நாதக் கழலொலிக்கும் நற்றுணைபோற்றி
தாதிற் பொலிகடப்பந் தார்போற்றி யெந்தைமகிழ்
சோதித் திருமயிலுஞ் சுடர்வேலும் போற்றிவெளி
மோதுங் குரல்முழக்கும் விறற்சேவ லும்போற்றி
கோதி லமரர்கோன் குலக்கொடியும் போற்றிவன
மீதிற் பயில்வேடர் குலம்விளக்கும் மின்போற்றி
ஓதும் புகழ்பழனி யொண்கிரியும் போற்றியெனப்
போத முறப்பாடிப் போற்றேலோ ரெம்பாவாய். 29

## பயன்.

சொல்லுக் கடங்காத தொல்பொருளை யாறிரண்டு
மல்லல் தடம்புயத்து வானவனை மார்கழிநாள்
ஒல்லை துயில்துறந்தே யொண்டொடியார் நீராடி
தொல்லை நெறிமுறையில் தொழுது பறைகொண்ட
நல்ல நடைமுறையை ஞாலங் களிகூரச்
சொல்லுந் தமிழ்மாலை யாறைந்துந் தேர்ந்துணர
வல்லார் வளர்பழனி வள்ளல் திருவருளால்
எல்லாப் பெருமையும்பெற் றின்புறுவ ரெம்பாவாய். 30

## வாழ்த்து.

வண்ண மாமலர்த் தாளிணை வாழியே
மாலைவாழி வளமயில் வாழியே
அண்ணல் வேற்படை வாழி யருள்பொழிந்
தார்த்திடுந் திருச்சேவ லும்வாழியே
விண்மடந் தையும்வாழி தினைப்புனம்
விளங்கவந்த குறக்குயில் வாழியே
நண்ணும் ஞாலமும் வாழியடியவர்
நாளும்வாழி நலம்வாழி வாழியே.

ஓம் முருகா.

பிரதிகள் கிடைக்குமிடம்:-

S. வாஞ்சீஸ்வரய்யர்,
64, பாலகோபாலபுரம் வீதி,
பொள்ளாச்சி.